தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 9, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 பிப்ரவரி 21, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றுலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

1. இரங்கற்குறிப்பு

திரு. த. வேணுகோபால், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான மொழிப்போர் தியாகி திரு. த. வேணுகோபால் அவர்கள் 15–2–2024 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. த. வேணுகோபால் அவர்கள் 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1996–1997, 1998–1999, 1999–2004, 2004–2009 மற்றும் 2009–2014 ஆகிய ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும்,

[2024 பிப்ரவரி 21

அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***10613—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சியில் சீமாவரம், சின்ன சீமாவரம் மற்றும் சீமாவரம் காலனி ஆகிய 3 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு, தற்போது ஊரக வளர்ச்சித் துறைமூலம் தனி மின்விசை திட்டங்கள்மூலம், நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு, 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சீமாவரம் ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிய கூட்டுக்